IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

SC No. 69 /2024

dated : 23.09.2025

P.W. 6

Name : குருநாதன்

சாட்சி மீண்டும் மனுவின்பேரில் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

<u>**குறுக்கு விசாரணை :**</u>

காளியம்மன் எங்கள் ஊர் மக்களுக்கு பொதுவான கோவில் ஆகும், அதில் ஒவ்வொரு ஆண்டும் சித்திரை மாத விழா சிறப்பாக கொண்டப்படும் என்றால் சரிதான். அதற்கு ஊர் மக்களிடம் வரி பிரித்து திருவிழா நடக்கும். அந்த திருவிழாவில் கோமதி முத்துராணி முதல் மரியாதை கேட்டார் என்றால் சரிதான். முதலில் இருந்த அதை வழக்கத்தை தொடரும்படி சொன்னார். ஊர் பொதுக்கோவிலில் தனிப்பட்ட நபருக்கு முதல் மரியாதை தரமுடியாது என்று ஊரில் ஒரு தரப்பினர் ஆட்சேபித்தார் என்றால் சரிதான். அதனால் 2016 ம் ஆண்டிற்கு முன்பாக சுமார் 4 ஆண்டுகளாக ஊர்த்திருவிழா நடைபெறாமல் நின்றுவிட்டது என்றால் சரிதான். மேற்படி காரணத்தினால் இரு தரப்பினரையும் அழைத்து வருவாய் துறையினர் வட்டாட்சியர் மற்றும் கோட்டாச்சியர் அலுவலகத்திலும் அமைதி கூட்டங்கள் நடத்தினார் என்றால் சரிதான். அந்த கூட்டத்தில் கோமதி முத்துராணிக்கு முதல் மரியாதை தர இயலாது என்றும், ஊர் மக்கள் அனைவரும் சேர்ந்து வழிபட்டு, திருவிழா நடத்தி கொள்ளாலம் என்று முடிவு செய்யப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான்

மேற்கண்ட வருவாய் துறை கூட்டங்களில் கலந்து கொண்டுள்ளேன். அதில் அதிகாரிகள் என்ன உத்தரவுகள் பிறப்பித்தார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. மதுரை உயர்நீதிமன்றத்தில் இரு தரப்பிலும் வழக்கு தொடர்ந்த விபரம் எனக்கு தெரியாது. மதுரை உயர்நீதிமன்றத்திலும் தனிநபருக்கு முதல் தர முடியாது என்றும், ஊர்பொது மக்கள் இந்து அறநிலைத்துறையினர் முன்பு நாட்கால் நட்டு விழா நடத்தி கொள்ளாலம் என்று உத்திரவிடப்பட்ட விபரமும் எனக்கு தெரியாது. அறநிலைத்துறை அதிகாரிகள் வந்து முடிவு செய்வார்கள் என்று முதல் விசாரணையில் கூறிய விபரம் எனக்கு நேரில் தெரியாது. நான் அறநிலைத்துறை அலுவலர் எவரையும் நான் நேரில் பார்த்து கேட்டுக்கொள்ளவில்லை. மண்டபத்தில் நாங்கள் எத்தனை பேர் கூடியிருந்தோம் என்று எனக்கு ஞாபகம் இல்லை. கோமதி முத்துராணிதான் என்னை மண்டபத்திற்கு அழைத்தார். அவரது பிரிவிற்கு அவரது தலைமையில்தான் மண்டபத்தில் கூடினோம். நாங்கள் மண்டபத்திற்கு கோவில் பக்கம் செல்லாமல் இருந்தால் பிரச்சனை வந்திருக்காது என்றால் சரிதான். நாங்கள் ரைஸ்மில் பக்கம் போனதால்தான் பிரச்சனை ஏற்பட்டது. எதிர் தரப்பினர் கோவில் முன்பு கூடியிருந்தார்கள், அவர்களுடன் அறநிலைத்துறை அலுவலர்களும் இருந்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அன்றையதினம் எதிர் தரப்பினர் கோவிலில் நாட்கால் நடுவதற்கு கூடியிருந்தார்கள் என்றால் அதற்குதான் கூடியுள்ளார்கள். நாட்கால் நடுவதற்கு கோவிலில் கூடியிருந்தவர்கள் ஆயுத ஏதும் இன்றி கூடியிருந்தார்கள் என்றும், அவர்கள் எங்களை தாக்கும் எண்ணத்துடன்

கூடியிருக்கவில்லை என்றால் சரியல்ல. நானும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். என்னை மருத்துவர் விசாரணை செய்தாரா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. மருத்துவரிடம் என்னை எத்தனை நபர்கள் தாக்கினார்கள் என்ற விபரத்தினையும், கூறவில்லை. மருத்துவரிடம் எந்தெந்த இடங்களில் எனக்கு காயம் ஏற்பட்டது என்று கூறினேனா என்றால் ஞாபகம் இல்லை. என்னை போலீசார் சம்பவம் பற்றி விசாரிக்கவில்லை. போலீசார் என்னை பார்த்தார்கள். கேட்டார்கள். போலீசாரிடம் என்ன கூறினேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை. முதல் விசாரணையில் நான் கூறியுள்ள பாண்டியராஜன் தலைமையில் ஒரு கூட்டம் அரிவாள் கற்களுடன் வந்ததாக கூறவது பொய் என்றால் சரியல்ல. கல்லால் இடது காலிலும், நெஞ்சிலும் காயம் ஏற்பட்டதாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. கோவிலில் நாட்கால் நடுவதை எதிர்ப்பு தெரிவித்து, கோமதி முத்துராணி மற்றும் அவரது தரப்பினர் தடுக்கும் நோக்கத்துடன் நாங்கள் தான் ஆயுதங்களுடன் கோவிலுக்கு சென்று, எதிரி தரப்பினரை தாக்கல் முற்பட்டோம் என்றால் சரியல்ல. லெட்சுமண பாண்டி மகன் மாரிச்சாமி, தங்கதுரையை தாக்கியதாக கூறியது பொய் என்றால் சரியல்ல. கோமதி முத்துராணிக்கு முதல் மரியாதைக்கு தரக்கூடாது கூறிய நபர்களில் தங்கத்துரையும் ஒருவர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தங்கத்துரையை எங்கள் தரப்பினர்களே தாக்கி காயப்படுத்திவிட்டு மருத்துவமனைக்கு எடுத்து செல்லாமல், சிகிச்சை அளிக்காமல் அங்கே போட்டுவிட்டோம் என்றால் சரியல்ல. நாங்கள் சென்ற ஆம்புலன்ஸ் வாகனத்தில்

காயம்பட்ட தங்கதுரையும்அழைத்து செல்லவில்லை. தங்கதுரைக்கு இறப்பிற்கு எங்கள் தரப்பினர்தான் காரணம் என்றால் சரியல்ல. இந்நீதிமன்றத்தில் எங்கள் தரப்பினர் மீதும் , ஒரு குற்ற வழக்கு உள்ளது என்றால் சரிதான். அது 03.05.2016 அன்று காலையில் நிகழ்ந்த குற்ற வழக்கு தொடர்பானது என்றால் சரிதான். நான் உண்மையை மறைத்து கோமதி முத்துராணிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எங்கள் தரப்பினருக்கு ஏறபட்ட காயங்கள் கூட்டத்தில் ஏற்பட்ட தள்ளுமுள்ளு காரணமாகவும், ஆயுதங்களுடன் சென்ற எங்களிடமிருந்து தப்பிக்கும் நோக்கத்திலும், ஊர் மக்கள் பாதுகாக்கும் நோக்கத்திலும் எங்களை தடுக்க முற்பட்டபோது ஏற்பட்ட காயங்கள் என்றால் சரியல்ல.

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.09.23 16:24:54 +0530

# DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, TENKASI.

## SC.No. 69 /2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | : | 7 | நாள் | : | 23.09.2025 |
| பெயர் | : | மாரிச்சாமி | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலூகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 23rd day of September 2025.

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

**முதல் விசாரணை**

நான் நெல்கட்டும்செவலில் குடியிருந்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். எதிரிகளைத் தெரியும். எங்கள்ஊரில் எந்த பிரச்சனையும் இல்லை. சாட்சியாக குறிப்பிட்டுள்ளதாக சொன்னார்கள். அதனால் வந்துள்ளேன். எங்கள் ஊரில் உள்ளமுடையார் கோவில், பூலுடையார் கோவில், காளியம்மன் கோவில், முத்தாரம்மன் கோவில் உள்ளது. அந்தக் கோவில் திருவிழாக்களில் எந்த பிரச்சனையும் இல்லை. எந்த வருடமும் அந்த திருவிழா நிற்கவில்லை. போலீசார் பாதுகாப்பிற்காக வருவார்கள். பிரச்சினை என்று வந்ததில்லை. சுமார் ஐந்து அல்லது ஆறு வருடங்களுக்கு முன்பு சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் தலையில் கல் பட்டதால் ஏற்பட்ட காயத்திற்கு சிகிச்சை பெற்றேன். நான் கிணற்றுக்குள் நின்று கொண்டிருந்தபோது தலையில் கல் விழுந்து காயம் ஏற்பட்டது. மருத்துவரிடமும் அவ்வாறு தான் சொன்னேன். போலீசார் என்னை அங்கு வந்து விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது.**

**குறுக்குவிசாரணை**

போலீசார்கள் என்னை விசாரித்தபோது என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் எங்கள் ஊர் கோமதிமுத்துராணி தலைமையில் ஒரு பிரிவாகவும், முத்தையா தேவர் மகன் பாண்டியராஜா என்ற தலைமையில் ஒரு பிரிவாகவும் செயல்பட்டு வருவதாகவும் அதனால் விரோதத்தில் இருந்து வந்தோம் என்றும் எங்கள் ஊர் கோவில் பூலுடையார் சாஸ்தா, உள்ளமுடையார் சாஸ்தா கோவில்களுக்குக்கும், காளியம்மன் கோவிலுக்கும் திருவிழா நடத்துவது சம்பந்தமாக பிரச்சனை இருந்து வந்தது என்றும் அதனால் கோவில் திருவிழா சரியாக நடைபெறவில்லை என்றும் எனவே 2016ம் ஆண்டு காளியம்மன் கோவில் திருவிழாவை நடத்த இந்து அறநிலையத் துறையை நாங்கள் அனுகியபோது சமாதான கூட்டம் நடத்தி விழா கொண்டாடலாம் என்று ஆலோசனை சொன்னார்கள் என்றும் அது பயன்தாரது என்பதால் நாங்கள் திருவிழா ஏதும் நடத்தாமல் இருந்து வந்தோம் என்றும் போலீசார் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல.

இந்நிலையில் கடந்த 03.05.2016 ம் தேதி முத்தையா தேவர் மகன் பாண்டியராஜா தரப்பினர் தாங்களகாவே விழா நடத்துவதற்கு ஏற்பாடு செய்வதாக கேள்விப்பட்டு நாங்கள் அனைவரும் காளியம்மன் கோவில் பக்கம் சென்றோம் என்றும் காலை சுமார் 9.30 மணியளவில் அவ்வாறு காளியம்மன் கோவிலுக்கு தென்புறமுள்ள ரைஸ் மில் அருகே சென்றபோது ஆஜர் எதிரி பாண்டியராஜா தலைமையில் மாரிச்சாமி, அசோகன் என்ற வெள்ளத்துரை, பொன்னுச்சாமி, கோட்டியப்பன், பாண்டித்துரை, கணபதி சாமி, அருணாச்சலசாமி, முத்தையா தேவர், பூலித்துரை என்ற பூலித்தேவன்,

ராஜா மகன் வெள்ளத்துரை, பொன்னுச்சாமி மகன் வெள்ளத்துரை, உள்ளமுடையார், சிவஞானபாண்டி, முத்துப்பாண்டி, மாரித்துரை, ராமையா மகன் வெள்ளத்துரை, சாமி மகன் முத்துத்துரை, தமிழ்ச் செல்வன், பால்பாண்டி, சுப்பிரமணியத்தாய், இளங்காமனி, முத்துதுரை மனைவி ராஜேஸ்வரி, பாண்டித்துரை மனைவி ராஜேஸ்வரி, செந்துர் பாண்டியன், வெள்ளத்துரைச்சி, சுந்தரய்யா தேவர் மகன் செந்தூர் பாண்டியன், சுப்பையா, பெரிய சுப்பையா மகன் உள்ளமுடையார், முத்துப்பாண்டியன் மனைவி வெள்த்துரைச்சி, வெள்ளப்பாண்டி தேவர் மகன் உள்ளமுடையார், தங்கசாமி மகன் ராஜா, தமிழ்ச் செல்வன் மனைவி வெள்ளத்துரைச்சி, முருகன் மனைவி வெள்ளத்துரைச்சி, உள்ளமுடையார் மனைவி பூங்கோடி, முத்துப்பாண்டியன் மகன் வெள்ளத்துரை, ராமர்பாண்டியன் மனைவி வெள்ளத்துரைச்சி, சண்முகையா தேவர் மகன் வெள்ளத்துரை, சண்முகையா மகன் உடையார், முருகன், கைலாசம் மகன் பால்பாண்டி, ராஜா மகன் ராஜாபாண்டி, சமுத்திரம், சுப்பையா பாண்டி, பூலுடையார் மகன் முருகன், ராமர்பாண்டி, முத்தாத்தாள், மாரிச்சாமி, முத்தையா, கருத்தப்பாண்டி, பூசையம்மாள், சண்முகத்தாய், மற்றும் சிலர் கைகளில் கற்கள், கம்புகள், அரிவாள்கள், கம்பிகள், ஆகியவற்றோடு எங்களை நோக்கி வந்தார்கள் என்றும் விடாதே பிடி என்று சத்தம்போட்டுக் கொண்டு வந்தார்கள் என்றும் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல.

அவ்வாறு வந்த நபர்கள் அனைவரும் எங்களை பார்த்து புண்ட மக்களா கூட்டமா வந்திருக்கிறிங்க எல்லாக் கூதிகளையும் இன்னைக்கு இந்த

இடத்திலேயே செத்து ஒழியனும் என்று கூறி கொலைவெறியுடன் ஒவ்வொருவரும் எங்கள் தரப்பினர்களை சேர்ந்தவர்களை நோக்கி தாக்கினார்கள் என்றும் போலீசார் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. முத்தையா தேவர் மகன் பாண்டியராஜனும், பொன்னுச்சாமியும் கல்லை எடுத்துக் கொண்டு முத்தையா மகன் வெள்ளத்துரையை புண்டை மகன் நீதான் எதற்கெடுத்தாலும் முன்னால வாரா இத்தோடு செத்து அழிந்துபோ என்று கூறிக்கொண்டே பாண்டியராஜன் கல்லை எடுத்து வெள்ளத்துரையின் தலையை நோக்கி எறிந்தார் என்றும் அதனால் வெள்ளத்துரைக்கு தலையின் இடது பக்க நெற்றியில் இரத்தக்காயம் ஏற்பட்டது என்றும் பொன்னுச்சாமி வெள்ளத்துரை தலையை நோக்கி குறி பார்த்து கல்லால் எறிந்தார் என்றும் அதை வெள்ளத்துரை இரண்டு கைகளால் தடுத்ததில் வலது உள்ளங்கையிலும் வலது கை நடுவிரலிலும், இடது கை ஆட்காட்டி விரலிலும் இரத்தக்காயங்கள் ஏற்பட்டிருந்தது என்றும் அதே நேரம் கோட்டியப்பன் கம்பால் வெள்ளத்துரையின் இடது முழங்கையில் அடித்து காயப்படுத்தினார் என்றும் தங்கதுரையை பார்த்து தொலைந்துபோல புண்டை மகனே என்று மாரிச்சாமி கையில் இருந்த கம்பியால் தலையில் அடித்தார் என்றும் தங்கதுரைக்கு தலையில் காயம் ஏற்பட்டது என்றும் மாரிச்சாமி மீண்டும் காசிராஜனை தொலைந்துபோல தேவிடியா மகனே என்று சொல்லிக் கொண்டே அரிவாளால் தலையில் வெட்டினார் என்றும் அதை காசிராஜன் தடுத்ததால் இடது முழங்கையிலும், இடதுகை புஜம் அருகிலும் காயங்கள் ஏற்பட்டது என்றும், கல்யாணித்தாயின் மீது சுப்பிரமணியத்தாய் பலவற்றை

என்று அசிங்கமாக ஏசிக் கொண்டே கல்லால் எறிந்தார் என்றும்அசோகன் என்ற வெள்ளத்துரை கண்டாரஓளிகளா எல்லோரும் தொலைந்து போங்க என்று கூறிக் கொண்டே கம்பால் கல்யாணித்தாயின் தலையில் அடித்தார் என்றும் பாண்டியராஜனும், பொன்னுச்சாமி மகன் வெள்ளத்துரையும் கல்யாணித்தாயின் மீது கல்லால் எறிந்தார்கள் என்றும் கல்யாணித்தாயின் தலையின் பின்புறமும், வலது தோள் பட்டையிலும் இரத்தக்காயங்களும், வலது கரண்டை காலில் காயமும் ஏற்பட்டு இருந்தார் என்றும் உள்ளமுடையார் மகன் மாரிச்சாமி வெள்ளத்தாயை தொலைந்து போ என்று சொல்லிக் கொண்டே அரிவாளால் வெட்டி வெள்ளத்தாயின் வலது நெற்றிப்பக்கம் காயம் ஏற்பட்டது என்றும் பாண்டித்துரை மனைவி ராஜேஸ்வரி வெள்ளத்துரை மனைவி சுப்பிரமணியத்தாய் மீது எறிந்தார் என்றும் சுப்பிரமணியத்தாயிக்கு இடது கண்ணுக்கு அருகிலும், வலது குதிங்கால் பக்கம் காயங்கள் ஏற்பட்டது என்றும் குருநாதன் என்பவரை பாண்டித்துரையும், வேல்ச்சாமியும் கல்லால் மாறி மாறி எறிந்தார்கள் என்றும் எனவே குருநாதனுக்கு இடது கரண்டைக்கால் இடது கால் முட்டுப் பக்கம் காயங்கள் ஏற்பட்டது என்றும் முருகையாவின் வலது தோள்பட்டையில் மாரிச்சாமி அரிவாளால் வெட்டினார் என்றும் முருகையாவை பூலித்துரை என்பவர் கல்லால் எறிந்து காயப்படுத்தினார் என்றும் இதனால் முருகையாவுக்கு வலது புறங்கை, வல து கரண்டைக்கால் ஆகிய இடங்களில் காயங்கள் ஏற்பட்டது என்றும் வெங்கடாச்சல தேவர் மகன் உள்ளமுடையாரை பொன்னுச் சாமி மகன் வெள்ளத்துரை கல்லால் எறிந்தார்

என்றும் எனவே உள்ளமுடையாருக்கு வலது முழங்கால் இடது முழங்கால் வலது கரண்டைக்காலுக்கு மேல்பக்கம் மற்றும் இடது மூக்கு பக்கம், வலது முழங்கை பக்கம் காயங்கள் ஏற்பட்டது என்றும் மாரிச்சாமியை அசோகன் என்ற வெள்ளத்துரை செத்துப்போல புண்டை மகனே என்று கம்பால் தலையில் அடித்தார் என்றும் சிவஞானபாண்டி இடது புறங்கையில் அடித்தார் என்றும் ராஜா மகன் வெள்ளத்துரை என்பவர் கல்லால் செல்லத்தாய் மீது எறிந்தார் என்றும் செல்லத்தாய்க்கு இடது தொடையில் காயம் ஏற்பட்டது என்றும் என்னை அசோகன் என்ற வெள்ளத்துரை கம்பால் செத்துப்போடா புண்ட மவனே என்று தலையில் அடித்தார் என்றும், சிவஞானபாண்டி கம்பால் இடது புறங் கையில் அடித்தார் என்றும், செத்துப்போங்கள் நாய்களா என்று கூறிக்கொண்டே சண்முகையா தேவர் மகன் உள்ளமுடையாரை உள்ளமுடையார் மகன் மாரிச்சாமி அரிவாளால் உச்சந்தலையில் வெட்டினார் என்றும் அவரை முத்துத்துரை கல்லால் எறிந்து வலது நாடியிலும, ஆட்காட்டி விரலிலும் காயம் ஏற்படுத்தினார் என்றும் போலீசார் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல.

நாங்கள் அனைவரும் தாக்குதலுக்கு பயந்து நாலாபுறமும் சிதறி ஓடினோம் என்றும் எதிரிகள் அவர்கள் கொண்டுவந்த ஆயுதங்களை அங்கேயே போட்டுவிட்டு ஓடிவிட்டார்கள் என்றும் நாஙகள் பதிலுக்கு எங்கள் மீது எறிந்த கற்களை தூக்கி அவர்கள் மீது எறிந்தோம் என்றும் அதனால் எதிரிகள் மீண்டும் கோவில் பக்கம் சென்றுவிட்டார்கள் என்றும் சம்பவத்தின்போது கோட்டைத் தெரு உள்ளமுடையார்

மகன் வெள்ளத்துரை என்பவர் அந்த இடத்தில் கையில் அரிவாளுடன் கூடியிருந்தார் என்றும் நாங்கள் 108 ஆம்புலன்ஸ் மூலம் சங்கரன்கோவில்அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்ததோம் என்றும் தங்கதுரை மட்டும் புளியங்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டு மேல்சிகிச்சைக்காக தென்காசி அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார் என்று கேள்விப்பட்டேன் என்றும் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் சிகிச்சையிலிருந்தபோது புளியங்குடி உதவி ஆய்வாளர் சிகிச்சையிலிருந்த வெள்ளத்துரையிடம் என்ன நடந்தது என்று விசாரித்தபோது வெள்ளத்துரை வாக்குமூலம் கொடுத்தார் என்றும் அதை உதவி ஆய்வாளர் பதிவு செய்து படித்து காட்டினார் என்றும் அதில் சண்முகையா மகன் முருகையா சாட்சியாக கையொப்பமிட்டார் என்றும் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகள் பலரும் என் உறவினர்கள் என்றால் சரிதான். எதிரிகள் சிலர் கைது செய்யப்பட்டதாக கேள்விப்பட்டேன். நானும் பிணையில் விடுவிக்கப்பட்டேன். அந்த சம்பவத்தில் நானும் இருந்ததாக போலீசார் வழக்கை எழுதிக் கொண்டார்கள். நானும் எதிரிகளும் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி என்மீதுள்ள வழக்கில் எதிரி தரப்பினர் சாட்சியாக உள்ளதால் அவர்கள் எனக்கு எதிராக சாட்சியமளிக்க கூடாது என்பதற்காக நானும் ஒப்பந்தப்படி உண்மையை மறைத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவ நேரத்தில் சம்பவ இடத்தில் சண்முகையா மகன் பால்பாண்டி முத்துப்பாண்டி கைலாசம் மகன் பால்பாண்டி

ஆகியோர்களால் காயம்பட்டேன் என்றும் அதனால்தான் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன் என்றும் சங்கரன்கோவில் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாகவும், கேரளாவில் இருந்ததாகவும் கூறுவது வழக்கிற்காக கூறும் பொய் என்றால் சரியல்ல. எதிரிகள் எனது உறவினர்கள் என்றால்சரிதான். அதனால் அவர்களை காப்பாற்ற பொய் சாட்சியம்சொல்கிறேன்என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பில் கு.வி.</u>

அ.சா.1 வெள்ளத்துரை என் உடன்பிறந்த சகோதரர். காசிராஜன் என் இளைய சகோதரர். கல்யாணித்தாய் வெள்ளத்துரையின் மனைவி.

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.09.23 16:25:05 +0530

DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, TENKASI.

**SC.No. 69 /2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | : | 8 | நாள் | : | 23.09.2025 |
| பெயர் | : | கல்யாணித்தாய் | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலூகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 23rd day of September 2025.

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் நெல்கட்டும் செவலில் குடியிருந்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 வெள்ளத்துரை என் கணவர் . எதிரிகளை தெரியும். சாட்சிகள் பூசைத்தாய், மகேந்திரன், உள்ளமுடையார், முருகையா, அருணாசலம், வெள்ளத்துரை, மாரிச்சாமி, வெள்ளத்தாய், செல்லத்தாய், குருநாதன், காசிராஜன், சுப்பிரமணியத்தாய் ஆகியோர்களைத் தெரியும். எங்கள்ஊரில் உள்ள காளியம்மன் கோவில் திருவிழா ஆண்டுதோறும் சித்திரை மாதம் நடைபெறும். மாசிமாதம் உள்ளமுடையார் கோவில் விழா நடைபெறும். 1 ம் எதிரி பாண்டியராஜா உள்ளாட்சி தேர்வு செய்யப்பட்ட பின்னர் எங்கள் ஊர் திருவிழாவில் பிரச்சினை ஏற்பட்டது. வழக்கமாக எங்கள் ஊரில் திருவிழா நடக்கும்போது பூலித்தேவர் வாரிசுகளில்

ஒருவரை ஊர்வலமாக அழைத்து வந்து சாமி கும்பிட்டு வந்தோம். அவ்வாறு அழைத்து வந்த நிகழ்ச்சியில் கோமதி முத்துராணியை தற்போது அழைத்து வந்து விழா கொண்டாடினோம். கடந்த இரண்டு ஆண்டுகளாக மட்டும் திருவிழா நடந்தது. இடையில் இந்த வழக்கு பிரச்சினை ஏற்பட்டதால் சில காலம் திருவிழா நடக்கவில்லை. 1 ம் எதிரி தரப்பினர் ஒரு பிரிவாகவும், நாங்கள் கோமதிமுத்துராணி தரப்பில் ஒரு பிரிவாகவும் இருந்து வந்தோம். பாண்டியராஜா தரப்பினர் அழைக்கக்கூடாது என்று கூறி வந்தனர். சுமார் 9 ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள்காலை 7.30 மணி முதல் 8.30 வரைக்குள் பூலித்தேவர் சிலைக்கு அருகில் உள்ள மண்டபத்தில் இருந்து புறப்பட்டுச் சென்றோம். அறங்காவலர் துறையினர் வருவதாகவும், அனைவரும் சேர்ந்து சாமி கும்பிடலாம் என்று என் கணவர் சொன்னதால் நாங்கள் அனைவரும் மண்டபத்திற்கு சென்றோம். சுமார் 20 பேர் மண்டபத்தில் இருந்தோம். அப்போது காளியம்மன் கோவிலில் குலவை சத்தமும், மேளச்சத்தமும் கேட்டது. எனவே நாங்கள் அனைவரும் கோயிலை நோக்கி பிள்ளையார் கோவில் தெரு வழியாக வடக்கு நோக்கி சென்றோம். ரைஸ் மில் அருகே செல்லும்போது சுமார் 100 பேர் கோயிலில் இருந்து கம்பு, அருவாள் உடன் எங்கள் பின்னால் வந்து விரட்டினார்கள். எதிரி தரப்பினர் வாய்க்கு வராத அவதூறான சொற்களை பேசி எங்களை கல்லால் அடித்து காயப்படுத்தினார்கள். லட்சுமண தேவர் மகன் மாரிச்சாமி தங்கத்துரையை கம்பியால் தலையில் அடித்து விட்டார். அசோகன் என்ற வெள்ளத்துரை என் தலையில் கம்பால் அடித்தார்.

மற்றொரு குருவி என்ற வெள்ளத்துரை என்னை தலையில் அடித்தார். பாண்டியராஜா மருமகன் மாரிச்சாமி தங்கத்துரையை கம்பால் தலையில் அடித்தார். சுப்பிரமணியத்தாயும், பாண்டியராஜாவும் கம்பால் தலையில் அடித்தார்கள். எனக்கு வலது தலையிலும், பின்தலையிலும் காயம் ஏற்பட்டது. நான் மயக்கமாக விழுந்துவிட்டேன். 108 ஆம்புலன்ஸ் மூலம் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். தங்கத்துரையை மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். அங்கு அவர் இறந்து போனார். என்னுடன் வந்தவர்களுக்கு எப்படி காயம் ஏற்பட்டது என்பது தெரியாது. மருத்துவமனையில் வைத்து என்னை போலீசார் விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

1 ம் எதிரி பாண்டியராஜா வீடு எங்கள் வீட்டிற்கு அடுத்த வீட்டில் குடியிருப்பவர். 2016 ம் ஆண்டு பிரச்சினைக்கு பின்னர் பேசிக்கொள்வதில்லை. 2016 ம் ஆண்டிற்கு முன்பும் பேசிக்கொள்வதில்லை என்றால் சரிதான். என்கணவர் 1 ம்எதிரிக்கு எதிராக பஞ்சாயத்து தலைவர் தேர்தலில் போட்டியிட்டு தோல்வி அடைந்தவர் என்றால் சரிதான். கோமதிமுத்துராணியை எதிர்த்து பஞ்சாயத்து உறுப்பினர் தேர்தலில் போட்டியிட்டு 1 ம்எதிரி வெற்றி பெற்றார் என்றால் சரிதான். 1 ம்எதிரி பஞ்சாயத்து தலைவர் தேர்தலிலும், ஒன்றிய கவுன்சிலர் தேர்தலிலும் வெற்றி பெற்றவர் என்றால் சரிதான். 1 ம் எதிரி தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் தான் ஊரில் பிரச்சினை என்று போலீசார் என்னை விசாரித்தபோது கூறவில்லை என்றால்

சரிதான். கோமதிமுத்துராணி பூலித்தேவரின் வாரிசு இல்லை என்றால் சரியல்ல. காளியம்மன் கோவில் ஊர் மக்களுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அந்த திருவிழா ஊர்மக்களிடம் வரி பிரித்து நடத்தும் திருவிழா என்றால் சரிதான். அந்த திருவிழாவில் தனி நபருக்கு தனிப்பட்ட முறையில் மரியாதை தர இயலாது என்று ஊர் மக்களில் ஒரு தரப்பினர் சொன்னார் என்றால் சரிதான். கோமதிமுத்துராணிக்கான முதல் மரியாதை பற்றி கோட்டாச்சியரிடமும், வட்டாட்சியரிடமும் சமாதானக்கூட்டம் நடந்தது என்றால் தெரியாது. அதில் யாருக்கும் முதல் மரியாதை கிடையாது என்று முடிவு செய்யப்பட்டது என்றும் எனக்கு தெரியாது. திருவிழா நடத்துவது சம்பந்தமாகவும், தனிநபருக்கு முதல் மரியாதை கொடுக்கக்கூடாது என்பது சம்பந்தமாகவும் உயர்நீதிமன்றத்தின் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட விவரம் தெரியாது. வெள்ளத்துரை (என் கணவர்) இது சம்பந்தமாக என்னிடம் எதுவும் கூறவில்லை. கோயிலில் மேளச்சத்தமும், குலவைச்சத்தமும் கேட்டது என்று போலீசார் விசாரணையில் கூறியிருக்கிறேனா என்றால் கூறியிருக்கிறேன். நானும் என் கணவரும், மேலும் சிலரும் கோமதிமுத்துராணி தூண்டுதலில் கோயிலில் தகராறு செய்யவேண்டும் என்ற எண்ணத்துடன் கோயிலை நோக்கி சென்றோம் என்றும், குலவைச்சத்தம், மேளச்சத்தம் கேட்டு சென்றதாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. இந்து அறநிலையத்துறை அலுவலர்கள் அன்றைய தினம் கோயில் நாள் கால் விடும் விழாவிற்கு வந்திருக்கிறார்கள் என்றால் எனக்கு தெரியாது. நாங்கள் அறநிலையத்துறை

அலுவலர்கள் வருவதற்காகவும், அனைவரும் சேர்ந்து சாமி கும்பிடுவதற்காகவும் மண்டபத்தில் கூடியிருந்தோம் என்ற விவரத்தை போலீசார் விசாரணையில் கூறியிருக்கிறேன். மண்டபத்தில் கோமதிமுத்துராணி அவரது கணவர் பாண்டியராஜாவும் எங்களுடன் கூடி இருந்தார்களா என்றால் இல்லை. என் கணவர் இருந்தார். நாள்கால் நடுவதற்கு ஒரு தரப்பினர் கோயிலுக்கு சென்றுள்ளார்கள் என்றும், அவர்களை தாக்கவேண்டும் என்ற எண்ணத்துடனும் தான் நாங்கள் மண்டபத்தில் கூடியிருந்தோம் என்றும், அறநிலையத்துறை அலுவலர்களின் வருகைக்காக காத்திருந்ததாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. எதிர் தரப்பினர் காயம்பட்டதாக எங்கள் மீதும் ஒரு வழக்கு உள்ளது என்றால் சரிதான். அது 03.05.2016 ம் தேதி காலையில் நடந்த சம்பவத்திற்கான குற்ற வழக்கு என்றால் சரிதான். நான் கம்பால் 1 ம்எதிரியை இடது, வலது கையில் அடித்து காயம் ஏற்படுத்தியதாக கூறுவது சரியல்ல. அறநிலையத்துறை அலுவலர்கள் முன்னிலையில் நாள்கால்நட்டு வழிபடுவதற்காக கூடியிருந்த எதிரி மற்றும் பொதுமக்களை எங்கள் தரப்பினர் திட்டமிட்டு ஆயுதங்களுடன் சட்டவிரோதமாக கூடி தாக்குவதற்காக கோயிலை நோக்கி சென்றோம் என்றால் சரியல்ல. எங்கள் தாக்குதலில் இருந்து தப்பித்துக்கொள்ளும் நோக்குடன் பொதுமக்கள் எங்களை தடுக்க நடவடிக்கை மேற்கொண்டபோது ஏற்பட்ட தள்ளு முள்ளு காரணமாக எனக்கும் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. ஒரே கூட்ட கலவரமாக இருந்ததால் யார் யாரை தாக்கினார்கள் என்பதை குறித்து கூறமுடியாது. தங்கத்துரையை நாங்கள்

மருத்துவமனைக்கு அழைத்து செல்லவில்லை. அவரது மகன் ஆட்டோவில் அழைத்து சென்றார். தங்கத்துரைதான் கோமதிமுத்துராணிக்கு முதல் மரியாதை தரக்கூடாது என்று சொன்ன நபர்களில் முக்கியமானவர் என்றால் சரியல்ல. எங்கள் தரப்பினர் தான் தங்கத்துரையை கூட்டத்தில் அடித்து காயப்படுத்தினோம் என்றால் சரியல்ல. அவரை காப்பாற்றாமல் கைவிட்டு சென்றோம் என்றால் சரியல்ல. மாரிச்சாமி தங்கத்துரையை கம்பியால் அடித்ததாக கூறுவதும், அசோகன் என்ற வெள்ளத்துரை என்னை கம்பால் அடித்ததாக கூறுவதும், சுப்பிரமணியத்தாய் பாண்டியராஜா என்னை கம்பாலும், கல்லாலும் அடித்ததாக கூறுவதும் பொய் என்றால் சரியல்ல. 1ம் எதிரி மருமகன் மாரிச்சாமி தங்கத்துரையை தலையில் அடித்ததாக கூறுவதும் பொய் என்றால் சரியல்ல. சுப்பிரமணியத்தாய் என்னை கம்பாலும், கல்லாலும் தலையில் அடித்தார் என்று போலீசார் விசாரணையில் கூறவில்லை என்றால் சரியல்ல. பஞ்சாயத்து தலைவர் தேர்தலில் 1ம்எதிரி வெற்றி பெற்றதால் அவர் மீது ஏற்பட்ட விரோதம் காரணமாக தொடர்ச்சியாக அவர் மீது பொய் வழக்கு போட்டுள்ளோம் என்றால் சரியல்ல. எனக்கும் எங்கள் தரப்பினர்க்கும் ஏற்பட்ட காயங்கள் பொதுமக்கள் தங்களை பாதுகாக்க எடுத்த நடவடிக்கையின் போது தள்ளு முள்ளுவில் ஏற்பட்ட காயங்கள் என்றால் சரியல்ல.

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.09.23 16:25:14 +0530